அன்னை தமிழீழ மண்ணே உன்னை
அள்ளி முத்தமிட ஓடி வருவேன்
உன் மடியில் வந்து நான் விளவேண்டும்
என்னை மறந்து விம்மி விம்மி அழவேண்டும் 2

எங்கு வாழ்ந்தாலும் உலகினிலே நான்
ஏதிலிஎன்ற பேர் தாங்குகிறேன்
கண்கள் குளமாக ஏங்குகிறேன் நான்
கனவிலும் அழுது தூங்கிறேன் 2

அன்னை தமிழீழ மண்ணே உன்னை

செக்கச்செவேல் என்ற செம்பருத்தி பூக்கள்
சிரித்திடும் என்வீட்டு முற்றமெங்கே 2
அக்கா தம்பி என்று முற்றத்திலே தாயும்
ஆடி மகிழ்ந்த என் சுற்றமெங்கே 2

அன்னை தமிழீழ மண்ணே உன்னை

கோடி கோடி இங்கே குவிந்தாலும் இந்த
கோடியும் மாடியும் என் நாடாகுமா 2
வாடி வறுமையில் நான் வாழ்ந்த நாளிலும்
அன்னை மண் தந்த மகிழ்ச்சிக்கு ஈடாகுமா 2

அன்னை தமிழீழ மண்ணே உன்னை

நேரில் நான் வரும் நாள் வரைக்கும் உன்
நினைவே உயிராக வாழ்வேனம்மா
போரில் நீ வெல்லும் நாள் வரைக்கும்
நான் புலிகளுக்கே துணை போனேனம்மா 2

அன்னை தமிழீழ மண்ணே உன்னை